**சாதாரணக் கூட்டம்**

**கூட்ட எண் – 07 / 2019** **திருத்தணி நகராட்சி,**
**நாள்: 31.05.2019**

நிகழும் விகாரி ஆண்டு, வைகாசி – 17, திருவள்ளுவர் ஆண்டு 2050 நாள் 31.05.2019 வெள்ளிக் கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் சாதாரணக் கூட்டத்தில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்.

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**

**பொருள் எண்– 1**

ஆணையர் அவர்களின் மார்ச் மற்றும் ஏப்ரல் – 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு : –**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்– 2**

திருத்தணி நகராட்சியின் பிறப்பு, இறப்பு பதிவுகள் மற்றும் இறந்து பிறந்தவை பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | மாதம் | பிறப்பு | இறப்பு | இறந்து பிறந்தவை |
|---|---|---|---|---|
| 1 | மார்ச் – 2019 | 39 | 23 | – |
| 2 | ஏப்ரல் – 2019 | 35 | 18 | – |

**அலுவலக குறிப்பு : –**
மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்– 3**

இந்நகராட்சியின் வரி மற்றும் வரியில்லாயினங்களின் வரவினம் மற்றும் செலவினம் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| மாதம் | வரவுகள் (ரூ.இலட்சம்) | செலவு சீட்டு எண். | செலவுகள் (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|
| மார்ச் – 2019 | 64.18 | SFC A/c 169 முதல் 184 வரை | 58.31 |
| | | RF A/c 248 முதல் 268 வரை | 32.86 |
| | | CF A/c 134 முதல் 141 வரை | 135.26 |
| | 1.10 | Amma A/c 68 to 72 வரை | 2.82 |

| | | | |
|---|---|---|---|
| ஏப்ரல் – 2019 | 40.06 | SFC A/c 1 முதல் 17 வரை | 81.92 |
| | | RF A/c 1 முதல் 17 வரை | 21.75 |
| | | CF A/c 1 முதல் 18 வரை | 36.80 |
| | 1.12 | Amma A/c 1 to 6 வரை | 2.81 |

**அலுவலக குறிப் பு :–**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்– 4**

இந்நகராட்சியில் அவசர அவசியம் கருதி கீழ் கண்ட பணிகளை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு(15)ன் கீழ் பணி மேற்கொண்டு முடிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | செலவு சீட்டு எண். | பணி முடிக்கப்பட்டு செலவிடப்பட்ட தொகை. ரூ |
|---|---|---|---|
| 1 | குமாரகுப்பம், பாலாஜி நகர், ஆறுமுகசாமி கோயில் தெரு, அமிர்தாபுரம் மற்றும் பெரியார் நகர் ஆகிய இடங்களில் உள்ள ஆழ்துளை கிணறு ஆகியவற்றில் கூடுதலாக குழாய் பொருத்தும் பணி | CF BPV 134/08.03.2019 | ரூ.1,35,815/– |
| 2 | பெரியார் நகர் ஏரி, ஜோதி நகர் ஏரி, ஜே.ஜே ரவி நகர், பாப்பி ரெட்டி பள்ளி ஏரி மற்றும் காந்திரோடு ஆகிய பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறு மின்மோட்டார்களை பழுது நீக்கம் செய்யும் பணி | CF BPV 135/08.03.2019 | ரூ.2,33,433/– |

**அலுவலக குறிப் பு :–**

மன்றம் பதிவு செய்யலாம்
(ந.க.எண்.87/2017/இ1)

**பொருள் எண்– 5**

இந்நகராட்சியில் மக்கள் பிரதிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயிற்சி மற்றும் பணியிட மாறுதல் தொடர்பாக அரசு விதிகளின்படி T.A. & T.T.A. என தகுதியுள்ள தொகை 2019–2020–ம் ஆண்டுக்கு வழங்கவும், அதற்கான செலவுகளை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். தோராயமாக ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1370/2017/சி1)

**பொருள் எண்– 6**

இந்நகராட்சி பகுதியில் கீழ் கண்ட பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நகராட்சி பகுதியில் உள்ள பொது மக்களுக்கு டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கும் பணி. | 10.00 |
| 2 | வார்டு எண்.20– சாய்பாபா நகரில் பழுதடைந்த கால்வாய் மற்றும் சிறுபாலத்தினை சீரமைத்தல் பணி. | 1.12 |
| 3 | மேல்நிலை நீர்தேக்க தொட்டித் தெரு மற்றும் பழைய தர்மராஜா கோவில் தெருவில் பழுதடைந்த சிமெண்ட் சாலையினை சீரமைத்தல் பணி. | 0.75 |

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.191/2019/இ1)

**பொருள் எண்– 7**

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆடி கிருத்திகை திருவிழா– 2019 நடைபெற உள்ளதால் திருவிழாவை முன்னிட்டு கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தற்காலிக கழிப்பிடம் ( Mobile Toilet ) அரக்கோணம் பஸ் ஸ்டான்ட், சென்னை, திருப்பதி பஸ் ஸ்டான்ட், சித்தூர் சாலை பஸ் ஸ்டாண்ட் மற்றும் பைபாஸ் ரோடு மேல் நிலை நீர் தேக்க தொட்டி அருகில் தற்காலிக கழிப்பிடங்கள் அமைத்தல். | 4.45 |
| 2 | தற்காலிக பேருந்து நிலையம் அமையுள்ள இடங்களில் JCB மூலம் தரை சமன் செய்து சுத்தம் செய்து தருதல் மற்றும் மேடு பள்ளங்களில் மண் கொட்டி சமன் செய்தல். | 0.75 |
| 3 | அரக்கோணம் பஸ் ஸ்டான்ட், சென்னை, திருப்பதி பஸ் ஸ்டான்ட், சித்தூர் சாலை பஸ் ஸ்டாண்ட் , நல்லான் குளம் பகுதி மற்றும் நகரின் முக்கிய பகுதிகளில் குழல் விளக்கு, ஆலோஜன் விளக்கு மற்றும் ஒலி பெருக்கி வாடகை அடிப்படையில் பொருத்துதல் மற்றும் மருத்துவ முகாம் அமைக்க தற்காலிக பேருந்து நிலையத்தில் ஜி.ஐ கூரையுடன் அறை அமைத்து தரும் பணி. | 1.20 |
| 4 | ஆடிக்கிருத்திகையை முன்னிட்டு திருக்குளம் மற்றும் நல்லான்குளம் பகுதியில் பொது சுகாதாரப் பணிக்காக தனியார் நிறுவனங்களிடமிருந்து டிராக்டர்கள் வாடகைக்கு சப்ளை செய்தல். | 0.30 |
| 5 | ஆடிக் கிருத்திகை திருவிழா 2019 முன்னிட்டு பணியாளர்களுக்கு உணவு வசதி ஏற்படுத்துதல் | 1.35 |

| | | |
|---|---|---|
| 6 | ஆடிக் கிருத்திகை திருவிழா 2019 முன்னிட்டு பொது மக்கள் அறியும் வண்ணம் குடிநீர் தொட்டி, குப்பை லாரி மற்றும் தண்ணீர் லாரிகளில் ஸ்டிக்கர் ஒட்டவும், பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புனர்வு பேனர்கள் வைக்கவும் குளத்தை சுற்றி பொது மக்களுக்கு எச்சரிக்கை பேனர்கள் வைத்தல் பணி. | 0.59 |
| 7 | ஆடிக் கிருத்திகை திருவிழா 2019 முன்னிட்டு பொது சுகாதார பணிக்கு ஒப்பந்த பணியாளர்களை சப்ளை செய்தல் பணி. | 0.75 |
| | மொத்தம் | 9.39 |

<u>அலுவலக குறிப்பு : -</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், பின்னர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிர்வாகத்திடமிருந்து அரசு ஆணைப்படி செலவினத் தொகையில் 50% திரும்ப பெற மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.898/2019/இ1)

பொருள் எண்–8

2019–ம் ஆண்டு ஆடிக் கிருத்திகை விழாவின்போது அனைத்து அரசு துறைகளை ஒருங்கிணைத்து அரசின் பல்வேறு சாதனைகள் திட்டங்களை விளக்கும் வகையில் திருத்தணியில் உள்ள தணிகேசன் திருமண மண்டபத்தில் பல்துறை பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சி நடைபெற உள்ளது. இப்பொருட்காட்சிக்கு தடுப்பு பந்தல் அமைத்து, மின்சார விளக்குகள் பொருத்தி, ஒலி–ஒளி அமைத்து ஏற்பாடுகள் செய்யவும் முகப்பு வாயிலில் வளைவு அமைப்பதற்கு மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம் அவர்கள் தெரிவிக்கும் தொகையினை மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 898 / 2019 / இ1)

பொருள் எண்– 9

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆடி கிருத்திகை திருவிழா – 2019–ஐ முன்னிட்டு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ் கண்ட இடங்களில் பழுதடைந்துள்ள உயர் கோபுர மின் விளக்குகளை பழுது நீக்கம் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சம்) |
|---|---|---|
| 1 | நகராட்சி பேருந்து நிலையம் மற்றும் மா.பொ.சி. சாலை மார்க்கெட் அருகில் உள்ள உயர்மின் கோபுர விளக்கினை பழுது நீக்கும் பணி. | 1.00 |
| 2 | திருக்குளம் பகுதியில் உள்ள உயர்மின் கோபுர விளக்கினை பழுது நீக்கும் பணி. | 1.00 |
| 3 | சித்தூர் சாலை கமலா தியேட்டர் அருகில் மற்றும் கடப்பா டிரங்கு ரோடு கமலா ரைஸ்மில் அருகில் உள்ள உயர்மின் கோபுர விளக்கினை பழுது நீக்கும் பணி. | 1.00 |

| | | |
|---|---|---|
| 4 | நல்லாண் குளம் மற்றும் மா.பொ.சி சாலை ஸ்டேட் பாங்கு அருகில் உள்ள உயர்மின் கோபுர விளக்கினை பழுது நீக்கும் பணி. | 1.00 |
| 5 | சென்னை பை–பாஸ் சாலை சந்திப்பு மற்றும் ஆறுமுகசாமி கோயில் தெருவில் உள்ள உயர்மின் கோபுர விளக்கினை பழுது நீக்கும் பணி. | 1.50 |

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழஙகலாம்
2. செலவினத்தை அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.898/2019/இ1)

**பொருள் எண்– 10**

இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள பொது சுகாதாரப் பிரிவு வாகனங்கள் மற்றும் ஈப்பு வாகனங்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய ஆகும் சில்லறை செலவினங்களை 2019–20–ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ள ஆகும் தோராய மதிப்பீட்டு தொகை ரூ.4.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.191/2019/இ1)

**பொருள் எண்– 11**

திருத்தணி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.17 எம்.பி.எஸ் சாலையில் சர்வே எண்.112/2A2A உள்ள திருமதி.J.ரஜினா & திருமதி.S.பாத்திமாகனி அவர்களின் சொத்துவரி விதிப்பு எண்.7133 முதல் 7142 வரையிலான கட்டிடங்கள் இடிக்கப்பட்டு தற்போது காலிமனையாக உள்ளபடியினால், மேற்படி சொத்துவரி விதிப்பு எண்களை ரத்து செய்திடவும், அவ்விடத்திற்கு காலிமனை வரி விதித்திடவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1849/2018/அ1)

**பொருள் எண்– 12**

இந்நகராட்சியில் Data Entry பணிகள் மேற்கொள்ள தோராய மதிப்பீட்டு தொகை ரூ.56,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 31.05.2019 இன்று காலை 10.30 மணிக்கு விலைப்புள்ளி கோரியமைக்கும், வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | GEE GEE Xerox, No.757/386,T.H. Road,Chennai – 19. | THIRMALAI PRINTERS & Xerox, No.202, Thulukana Naicker street, Thiruvottriyur, Chennai – 19. | Ganesh Printers, No.172, Thulkananacicken street, Chennai – 19. |
|---|---|---|---|
| Data entry work which was specify by the municipality in various format (Excel and word) | Rs.3/- Per Data<br>Rs.25/- Per Page | Rs.3.75/- Per Data<br>Rs.28/- Per Page | Rs.3.50/- Per Data<br>Rs.30/- Per Page |
| Lazer printout & Xerox which was specify by the municipality in booklet format | Rs.1/- Per Page<br>Rs.0.89/-Per Page | Rs.2/- Per Page<br>Rs.1/- Per Page | Rs.2/- Per Page<br>Rs.1/- Per Page |
| Soft Binding (or) Hard Binding | Rs.50/- Per Book | Rs.50/- Per Book | Rs.50/- Per Book |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள GEE GEE Xerox, No.757/386,T.H.Road,Chennai – 19. அவர்களுக்கு பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு –**

1. அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று GEE GEE Xerox, No.757/386,T.H.Road,Chennai – 19. அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
3. செலவினத்தை அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.536/2017/பி1)

**பொருள் எண்– 13**

மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.எண்.1333/2018/அ1 நாள்.03.01.2019–ல் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நேரு நகர் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்தினை பராமரிப்பு பணி செய்ய ரூ.2.00 லட்சம் ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. எனவே நேரு நகர் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்தினை ரூ.2.00 லட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.97/2019/இ1)

**பொருள் எண்– 14**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.08–ல் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.9.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதி அல்லது தனியார் நிறுவனத்தின் சமுதாய பொறுப்பு நிதி (CSR Fund) பெற்று பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.191/2019/இ1)

**பொருள் எண்– 15**

இந்நகராட்சியில் சொந்தமான சன்னதி தெரு கடை எண்.9 திரு.வி.விநாயகம் என்பவர் **03.05.2018** முதல் குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறார். தற்போது மேற்படி கடையை தொடர்ந்து நடத்த இயலாததால் நகராட்சி வசம் ஒப்படைக்கப்படுவதாக **31.12.2018**-ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில், குத்தகை மற்றும் ஏல நிபந்தனைகளின்படி **31.12.2018**-ம் தேதியுடன் குத்தகை ரத்து செய்யயும், அன்னார் செலுத்தியுள்ள வைப்புத் தொகை ரூ.40,000/-ஐ **01.07.2016** முதல் **31.05.2019** வரை உள்ள மாதத்திற்கு ஈடு செய்து கொண்டும், குத்தகை நிபந்தனைகளின்படி மீதம் உள்ள வைப்புத் தொகையை நகராட்சி பொது நிதியில் வரவு வைக்கவும், மேலும், கடையை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2879/2018/அ1)

**பொருள் எண்– 16**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் கொசு ஒழிப்புப் பணிகள் மேற்கொள்ள பயன்படுத்தப்படும் சிறிய வகை கொசு மருந்து புகை தெளிப்பான் கருவி 2 எண்ணிக்கை மற்றும் பெரிய வகை கொசு மருந்து புகை தெளிப்பான் கருவி 1 எண்ணிக்கை ஆகியவற்றில் பழுது ஏற்பட்டுள்ளதால் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நாள்தோறும் மேற்கொள்ளப்படும் கொசு ஒழிப்பு பணி பாதிப்படைகிறது, இதனால் நகர் பகுதியில் கொசுவால் ஏற்படும் டெங்கு காய்ச்சல், சிக்கன் குனியா மற்றும் மலேரியா போன்ற வியாதிகள் பரவ வாயப்புள்ளது, எனவே மேற்கண்ட கொசு மருந்து புகை தெளிப்பான்களை பழுது நீக்கும் பணிக்கு தோராய மதிப்பீட்டு தொகை ரூ.30,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது, மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று **31.05.2019** இன்று காலை **10.30** மணிக்கு விலைப்புள்ளி கோரியமைக்கும், வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | கார்த்திகா சிஸ்டம் இன்ஞினியரிங், சென்னை 83. | தயாளன் இன்ஞினியரிங், சென்னை 15. | பவாணியம்மாள் எண்டர் பிரைசஸ், சென்னை 78. |
|---|---|---|---|
| Mini Fogging M/c | Rs.15,590/- | Rs.18,030/- | Rs.17,150/- |
| Portable Fogging M/c - 1 | Rs.4,950/- | Rs.6,200/– | Rs.5,930/– |
| Portable Fogging M/c – 2 | Rs.5,560/- | Rs.6950/- | Rs.6,620/- |

**அலுவலக குறிப்பு : –**

1. அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Karthiga Systems Engineering, T-191, Kattapomman Street, Pari Nagar,Chennai – 83. என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கலாம்.
3. செலவினத்தை அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.279/2019/எச்1)

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**